அசல் வழக்கு எண்.133/2018 தேதி. 25.09.2023.

வா.சா.1- அண்ணாவி

7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தந்தை பெயர் பொன்னுசாமி ஆகும். என் தாயார் பெயர் தங்கம்மாள் ஆகும். எனது தாயார் இறந்து சுமார் 7 வருடங்களாகிறது. என் தந்தைக்கு தங்கராசு, நான், ஆறுமுகம், மாணிக்கம், பாக்கியம் மற்றும் சின்னம்மாள் ஆகியோர் பிள்ளைகள். எங்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. 1ம் பிரதிவாதி தங்கராசு வழக்கு நிலுவையில் உள்ளபோது இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் 7 முதல் 11 பிரதிவாதிகள் ஆவர். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் ஆவணங்கள் பற்றி தெரியும் என்றால் சரிதான். A பட்டியல் சொத்தாக சர்வே எண்.558/1A8 மற்றும் சர்வே எண்.558/2C காட்டப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை கோரி என் மீதும், என் தகப்பனார் மற்றும் சகோதர சகோதரிகள் மீதும் அசல் வழக்கு எண்.10/2009 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பாணை வா.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் எங்கள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகததால் நீதிமன்றம் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.12ல் கண்ட சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினைக்கு முதல் நிலை தீர்ப்பாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி முதல் நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி தங்கராசு இறுதி நிலை தீர்ப்பாணை வேண்டி இ.ம.எண்.1116/2010 மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. அந்த மனு நடவடிக்கையில் எங்கள் தரப்பில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி இருந்தோம் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.10/2009 மற்றும் இ.ம.எண்1116/2010 வழக்கு நடவடிகக்கையிலும் நாங்கள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகவில்லை. மேற்படி மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. நீதிமன்ற உத்தரவுப்படி நீதிமன்ற ஆணையர் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்தும், அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. ஏற்கனவே நாங்கள் பாகம் பிரித்து கொண்டோம். நீதிமன்றம் மூலம் பாகம் பிரிக்கப்பட்ட விவரம் 2018ம் ஆண்டு இவ்வழக்கு தாக்கல்

**செய்தபோது எனக்கு தெரியும். தாவா வழக்கிற்கு முன்பு தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்பட்ட முன் வழக்கு நடவடிக்கைகள் பற்றி எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.**

**(பிரதிவாதிகள் தரப்பினர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.
S/d. Witness xxxxx
Checked and Uploaded by Typist

S/d.Thiru.P.Balamurugan,
Principal District Munsif,
Kulithalai.